## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
## பாராளுமன்றம்

---

# 1993 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க,
# ஊழியர்கள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்
# (சிறப்பேற்பாடுகள்) சட்டம்

---

*[1993, மார்ச் மாதம் 31 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

**அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது**

---

*1993, ஏப்பிறல் மாதம் 02 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுக் கூட்டுத்தாபனத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

---

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 60 — தபாற் செலவு : ரூபா 1.00

# 1993 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் (சிறப்பேற்பாடுகள்) சட்டம்.

[1993, மார்ச் மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஒ. 39/91

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினதும் உயர்கல்வி நிறுவனங்களினதும் ஊழியர்களுக்கு 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் ஏற்பாடுகளை ஏற்புடையனவாகச் செய்வதற்கும் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 97அ என்னும் பிரிவை நீக்குவதற்கும், அத்துடன் அதனுடன் தொடர்புபட்ட அல்லது அதற்கு இடைநேர்விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டம் 1993 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, ஊழியர்கள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் (சிறப்பேற்பாடுகள்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கச் சட்டத்தின் 97அ என்னும் பிரிவை நீக்குதல்.

2. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தெட்டாம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 97அ என்னும் பிரிவு இத்தால் நீக்கப்படுகின்றது.

1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினதும் அத்துடன் உயர்கல்வி நிறுவனங்களினது ஊழியர்களுக்கும் ஏற்புடைத்தாக்குவது.

3. (1) முதன்மைச் சட்டவாக்கத்தின் ஏற்பாடுகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கும் உயர் கல்வி நிறுவனம் ஒவ்வொன்றுக்கும் 1980 திசெம்பர் ஒன்பதாம் தேதியிலிருந்து ஏற்புடையனவாக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கும் ஒவ்வோர் உயர்கல்வி நிறுவனங்களும் நிதியத்திற்கு உதவு தொகைகள் செலுத்த வேண்டிய பொறுப்பு 1981 மார்ச் 1 ஆம் தேதி தொடங்கிவிட்டதாகவும் கருதப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னரான ஏதேனும் காலப்பகுதிக்கு, எந்த ஆளேனும் விடயத்துக்கேற்றுறப்போன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அல்லது அத்தகைய உயர்கல்வி நிறுவனத்தின் ஊழியர் ஒருவராக இருக்கின்றாரோ அல்லது அவ்வாறு இருந்தாலோ அந்த ஆளொருவர் தொடர்பாக —

(அ) 1981 மார்ச் 3 ஆம் தேதியன்று அத்தகைய ஆள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அல்லது உயர் கல்வி நிறுவனத்தின் ஊழியர் ஒருவராக இருந்ததோடு இச்சட்டம் தொடங்கும் தேதியன்று விடயத்துக்கேற்றுறப்போன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அல்லது அத்தகைய

உயர் கல்வி நிறுவனத்தின் ஊழியர் ஒருவராகத் தொடர்ந்தும் இருக்குமிடத்திலான ஏதேனும் விடயத்தின் அத்தகைய ஆள் தொடர்பில் விடயத்துக்கேற்றுற் போன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அல்லது அத்தகைய உயர் கல்வி நிறுவனத்தினால் அக்காலப்பகுதியின் போது நிதியத்திற்குச் செய்யப்பட்ட எவையேனும் உதவுதொகைகளைக் கழித்து 1981 மார்ச் 1 ஆம் தேதியன்று தொடங்கி இச்சட்டம் தொடங்கும் தேதியன்று முடிவடைகின்ற காலப்பகுதிக்கான ஒவ்வொரு மாதத்திற்கும் அத்தகைய ஆளின் மொத்த உழைப்புக்களின் மூன்று சதவிதத்திற்குச் சமமான தொகை;

(ஆ) 1981 மார்ச் 1 ஆம் தேதிக்குப் பிந்திய தேதியில் அத்தகைய ஆள் விடயத்துக்கேற்றுற்போன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அல்லது உயர்கல்வி நிறுவனத்தின் ஊழியர் ஒருவராக வந்து இச்சட்டம் தொடங்கும் தேதியன்று விடயத்துக்கேற்றுற்போன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அல்லது உயர்கல்வி நிறுவனத்தின் ஊழியர் ஒருவராக இருக்குமிடத்திலான ஏதேனும் விடயத்தில் அத்தகைய ஆள் தொடர்பில் விடயத்துக்கேற்றுற்போன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அல்லது அத்தகைய உயர்கல்வி நிறுவனத்தினால் அக்காலப்பகுதியின் போது நிதியத்திற்குச் செய்யப்பட்ட எவையேனும் உதவுதொகைகளைக் கழித்து, எந்தத் தேதியன்று அத்தகைய ஆள் விடயத்திற்கேற்றுற்போன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அல்லது அத்தகைய உயர்கல்வி நிறுவனத்தின் ஊழியர் ஒருவராக வந்துள்ளாரோ அந்தத் தேதியன்று தொடங்கி இச்சட்டம் தொடங்கும் தேதியன்று முடிவடைகின்ற காலப்பகுதியிலான ஒவ்வொரு மாதத்திற்கும் அத்தகைய ஆளின் மொத்த உழைப்புக்களின் மூன்று சதவிதத்திற்குச் சமமான தொகையொன்றை;

(இ) 1981 மார்ச் 1 ஆம் தேதியன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அல்லது உயர்கல்வி நிறுவனமொன்றின் ஊழியர் ஒருவராக இருந்து இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னரான தேதியொன்றில் விடயத்துக்கேற்றுற்போன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அல்லது அத்தகைய உயர் கல்வி நிறுவனத்தின் ஊழியர் ஒருவராக இல்லாதொழியுமிடத்திலான ஏதேனும் விடயத்தின், அத்தகைய ஆள் தொடர்பில் விடயத்திற்கேற்றுற்போன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அல்லது அத்தகைய உயர்கல்வி நிறுவனத்தினால் அக்காலப்பகுதியின் போது செய்யப்பட்ட எவையேனும்

உதவுதொகைகளைக் கழித்து 1981 மார்ச் 1 ஆம் தேதியன்று தொடங்கி எந்தத் தேதியன்று அத்தகைய ஆள் விடயத்துக்கேற்றுற்போன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அல்லது அத்தகைய உயர்கல்வி நிறுவனத்தின் ஊழியரொருவராக இல்லாதொழிகின்றாரோ அந்தத் தேதியன்று முடிவடைகின்ற காலப்பகுதியிலான ஒவ்வொரு மாதத்திற்கும் அத்தகைய ஆளின் மொத்த உழைப்புக்களின் மூன்று சதவீதத்திற்குச் சமமான தொகையொன்றை;

(ஈ) 1981 மார்ச் 1 ஆம் தேதிக்குப் பின்னரான ஏதேனும் தேதியில், அத்தகைய ஆள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அல்லது உயர்கல்வி நிறுவனமொன்றின் ஊழியரொருவராக வந்து இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னரான தேதியொன்றில் ஊழியர் ஒருவராக இல்லாதொழியுமிடத்திலான ஏதேனும் விடயத்தில், அத்தகைய ஆள் தொடர்பில் விடயத்துக்கேற்றுற்போன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அல்லது அத்தகைய உயர்கல்வி நிறுவனத்தினால், அக்காலப்பகுதியின் போது நிதியத்திற்குச் செய்யப்பட்ட எவையேனும் உதவுதொகைகளைக் கழித்து அத்தகைய ஆள் எந்தத் தேதியன்று விடயத்திற்கேற்றுற்போன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அல்லது அத்தகைய உயர்கல்வி நிறுவனத்தின் ஊழியரொருவராக வந்துள்ளாரோ அந்தத் தேதியன்று தொடங்கி, எந்தத் தேதியன்று விடயத்துக்கேற்றுற்போன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அல்லது அத்தகைய உயர்கல்வி நிறுவனத்தின் ஊழியர் ஒருவராக இல்லாதொழிந்தாரோ அந்தத் தேதியன்று முடிவடைகின்ற காலப்பகுதியிலான ஒவ்வொரு மாதத்திற்கும் அத்தகைய ஆளின் மொத்த உழைப்புக்களின் மூன்று சதவீதத்திற்குச் சமமான தொகையொன்றை

இச்சட்டம் தொடங்கி ஆறு மாதங்களுக்குள்ளாக அது நிதியத்திற்குச் செலுத்தினால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினாலான அல்லது அத்தகைய உயர்கல்வி நிறுவனத்தினாலான உதவுதொகைகளின் கொடுப்பனவைத் தேவைப்படுத்துகின்றதான முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுடன், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும், உயர்கல்வி நிறுவனமொன்றும், எல்லா நோக்கங்களுக்காகவும் இணங்கியொழுகின்றனவாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) எவரேனும் ஆள் தொடர்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அல்லது உயர்கல்வி நிறுவனமொன்றினால் (1) ஆம் பிரிவின் கீழ் செய்யப்பட்ட எவையேனும் கொடுப்பனவுகள், சபையினால் அத்தகைய ஆளின் தனிப்பட்ட கணக்குக்கு நிதியத்தில் வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

4. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பொருள் கோடல்.

5. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையில் தேவைப்படுத்தினாலன்றி —

"சபை" என்பது முதன்மைச் சட்டவாக்கத்தினால் தாபிக்கப்பட்ட ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை என்று பொருள்படும் ;

"நிதியம்" என்பது முதன்மைச் சட்டவாக்கத்தினால் தாபிக்கப்பட்ட ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் என்று பொருள்படும் ;

"உயர்கல்வி நிறுவனம்" என்பது 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தில் உள்ள அதே கருத்தைக் கொண்டதாகும் ;

"முதன்மைச் சட்டவாக்கம்" என்பது 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டம் என்று பொருள்படும் ;

"பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு" என்பது 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு என்று பொருள்படும்.